**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.700/2024 நாள்- 03.11.2025

சா.சா.1-

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்- ம.பாக்கியராஜ் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மாவட்ட பதிவாளர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் வழங்கியுள்ளார்.

ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத்தாள் G 873942 ( 33438) என்ற முத்திரைத்தாளை உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளரான K.S.குமாராசாமி பிள்ளை(A.4 1006-61) என்பவருக்கு( 11.02.2009 அன்று எங்கள் பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக இணை 4 சார்பதிவாளர் அலுவலகம் பாளையங்கோட்டை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பதிவேடு எண்.8 ஐ தாக்கல் செய்கிறேன். பதிவேடு எண்-8 என்பது உரிமம் பெற்ற முத்திரைதாள் விற்பனையாளர் எந்தெந்த நபருக்கு எந்தெந்த தேதிகளில் யாருக்கு விற்பனை செய்யப்பட்டது என்று முத்திரை விற்பனையாளரால் பராமரிக்கப்படும் பதிவேடாகும். அந்த பதிவேடு முடிந்தவுடன் எங்கள் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத்தாள் G 873942 ( 33438) என்ற முத்திரைத்தாளை உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளரான K.S.குமாராசாமி பிள்ளை, நாகூர் மீரான் தாழையுத்து என்பவருக்கு 11.02.2009 அன்று விற்பனை செய்துள்ளார். அன்றைய தினம் ரூ.50/-யில் 66 முத்திரைத்தாள்களும், ரூ.20/-ல் 10 முத்திரைத்தாள்களும் ரூ.10/-ல் 59 முத்திரைத்தாள்களும் விற்பனை செய்துள்ளார் மொத்தம் ரூ.4090/-க்கு விற்பனை செய்துள்ளார். ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத் தாளின் ஆரம்ப வரிசை எண் 33397 முதல் 33462 வரை விற்பனை செய்துள்ளார். அசல் பேரேடு கொண்டு வந்துள்ளேன். அழைப்பாணையில் சம்பந்தப்பட்ட விற்பனை தாள் பற்றிய குறிப்பு பக்க எண்.118-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு மாவட்ட பதிவாளர் வழங்கிய சாட்சியம் அளிக்க வழங்கிய அதிகாரம் **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பதிவேடு 8-ன் நகல் **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( அசலுடன் ஒப்பீட்டு பார்க்கப்பட்டுள்ளது)

குறுக்கு விசாரணை -

K.S.குமாரசாமிபிள்ளை என்பவர் தான் பதிவேடு 8-ஐ பராமரித்து வருகிறார் என்பதை காட்டுவதற்கு அத்தாட்சி தாக்கல் செய்யவில்லை. எங்களுக்கு வந்த அழைப்பாணையில் தேதி, மாதம், வருடம் குறிப்பிடப்படாத முத்திரைத்தாள் பற்றிய விவரங்கள் குறித்து அழைப்பாணையில் சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சா.சா.ஆ.1-ல் எனக்கு சாட்சியம் அளிக்க தனியாக அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். பதிவேடு 8- நிரந்தர பதிவேடு என்பதால் அழிக்கப்படுவது இல்லை. பதிவேடு யாருக்கு வழங்கப்பட்டது என்றும் அழிக்கப்படுவது சம்பந்தமாக மாவட்ட பதிவாளர் தான் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் தெரியாது. பதிவேடு -8 ல் மொத்தமாக ரூ.50/-, ரூ.20/-, ரூ. 10/- மதிப்புள்ள முத்திரைத்தாள்கள் பல்வேறு நபர்களுக்கு பல்வேறு எண்ணிக்கையில் மொத்தமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பல்வேறு எண்ணிக்கையில் விற்பனை செய்து சட்டத்திற்கு புறம்பாக தவறாக விற்பனை செய்திருந்தால் மாவட்ட பதிவாளர் அந்த முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமத்தை ரத்து செய்துவிடுவார் என்றால் சரிதான்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.